# தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

நாள் : 04.02.2023

# PRESS RELEASE

## உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு சிறப்பிடம்

## திமுக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்

இறந்தவர்கள் உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு மிகச் சிறப்பிடம் பெற்றுள்ள மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது என்று ஒன்றிய அரசின் சுகாதார மற்றும் நல்வாழ்வுத்துறை இணை அமைச்சர் பாரதி பிரவீன் பவார் தெரிவித்தார்.

இது தொடர்பாக மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கதிர் ஆனந்த் ஆகியோர் வெள்ளிக்கிழமை எழுப்பிய கேள்விக்கு மேற்கண்ட பதிலை ஒன்றிய அமைச்சர் தெரிவித்தார்.

**முன்னதாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கதிர் ஆனந்த் ஆகியோர் இது தொடர்பாக எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கதிர் ஆனந்த் ஆகியோர் இது தொடர்பாக மக்களவையில் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:

இறந்தவர்கள் உடல் உறுப்பு தான திட்டத்தில் தீவிரமாகச் செயல்படும் மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடம் பெற்றுள்ளதா? இது தொடர்பாக தேசிய உடல் உறுப்பு மற்றும் திசுக்கள் மாற்று திட்ட அமைப்பின் மூலம் சிறப்பான மாநிலத்திற்கான விருது பெற்றுள்ளதா? அவ்வாறெனில் அது தொடர்பான விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

ஒன்றிய அரசின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று ஆணையகமும் பிராந்திய உடல் உறுப்பு மற்றும் திசுக்கள் மாற்று அமைப்பும் மாநில உறுப்பு மற்றும் திசுக்கள் மாற்று அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றனவா? அவ்வாறினில் அது பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று ஆணையகத்தின் செயல்பாடுகளை அதிகரிக்க ஒன்றிய அரசு அளித்து வரும் நிதியுதவி மற்றும் நிர்வாக ஆதரவு தொடர்பான விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

தேசிய உறுப்பு மற்றும் திசுக்கள் மாற்று அமைப்பின் உரிமம் மற்றும் பதிவுபெற்ற மருத்துவமனைகள் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறதா? அவ்வாறெனில் அது தொடர்பான விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

உடல் உறுப்புகள் அவசியம் தேவைப்படும் நோயாளிகளுக்கு இறந்தவர் சடலங்களில் இருந்து உடல் உறுப்புகளைப் பெறுவதற்கான வழிவகைகள் செய்வதற்கு வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒன்றிய அரசும் ஒன்றிய அரசின் தொடர்புடைய இது தொடர்பான அமைப்புகளும் மேற்கொண்டு நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

**திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கதிர் ஆனந்த் ஆகியோர் எழுப்பிய மேற்கண்ட கேள்விக்கு ஒன்றிய அரசின் சுகாதார மற்றும் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பாரதி பிரவீன் பவார் அளித்த பதில் விவரம் வருமாறு:**

இறந்தவர்களின் உடலை தானமாகப் பெறுவதில் தீவிரமாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். நமது நாட்டின் உறுப்பு தான தினத்தில் கடந்த 2018-19 மற்றும் 2020-21 ஆகிய ஆண்டுகளில் தேசிய உறுப்பு மற்றும் திசுக்கள் மாற்று அமைப்பின் மூலம் (என்.ஓ.டி.டி.ஓ.) இதற்கான மிகச் சிறப்பான விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது.

அதே சமயம் கடந்த 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் மகாராஷ்டிரம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்கள் இறந்தவர் உறுப்பு தான மற்றும் சிகிச்சை அளிப்பதில் எண்ணிக்கை அளவில் மிகச்சிறந்த செயல்பாடு உடைய மாநிலங்களாகத் திகழ்கின்றன.

தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையகம், பிராந்திய உடல் உறுப்பு மற்றும் திசுக்கள் மாற்று அமைப்பாக (ஆர்.ஓ.டி.டி.ஓ.) செயல்பட்டு வருகிறது. தேசிய உறுப்பு மாற்று திட்டத்தின் (என்.ஓ.டி.பி.) வழிகாட்டுதலின்படி ஆர்.ஓ.டி.டி.ஓ.வும் மாநில உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பாக அது எந்த மாநிலத்தில் அமைந்துள்ளதோ அங்கு அந்த பெயரில் செயல்படுகிறது. தொடர்பாக பிராந்திய உடல் உறுப்பு மற்றும் திசுக்கள் மாற்று அமைப்பிற்கு 2015-16 முதல் 2018-19 ஆம் ஆண்டு வரை தமிழகத்திற்கு ரூ. 293 கோடி நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

என்.ஓ.டி.டி.ஓ. மற்றும் என்.ஓ.டி.பி. ஆகியவற்றின் கீழ் தமிழ்நாட்டில் 120 மருத்துவமனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மற்றும் மீட்பு மையங்களாக இந்த மருத்துவமனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. என்.ஓ.டி.டி.ஓ. ஆர்.ஓ.டி.டி.ஓ. மற்றும் எஸ்.ஓ.டி.டி.ஓ. ஆகிய அமைப்புகளின் மூலம் உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவம் குறித்து என்.ஓ.டி.பி. திட்டத்தின் கீழ் பரப்புதலலும் பிரச்சாரமும் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இதுதொடர்பாக இரவு பகல் 24 மணி நேரமும் இயங்கும் இலவச தொலைபேசி எண் 1800114770 மற்றும் இணையதளம் டபுள்யு டபுள்யு டபுள்யு. என்ஓடிடிஓ ஜிஓவி. ஐஎன்: மூலமாகவும் உடல் உறுப்புகள் தான பணிகளை ஒருங்கிணைக்க உதவுவதற்காக தொலைபேசி மூலமும் ஆலோசனை வழங்குதல் தேவையான தகவல் தெரிவித்தல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் உடல் உறுப்புகள் தான தினத்தில் கருத்தரங்குகள் நடத்துதல், பயிலரங்குகள் ஏற்பாடு செய்தல், விவாத மேடை கருத்தரங்குகள் நடத்துதல், விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், மாரத்தான் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், நாடக நிகழ்ச்சிகள் மூலம் பரப்புதல் செய்தல், இந்திய தேசிய வர்த்தகப் பொருள்காட்சியில் இது தொடர்பான விழிப்புணர்வு அரங்குகளை அமைத்தல், மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவின் (ஐசியூ) வெளிப்புறத்திலும் மருத்துவமனைகளின் இதர முக்கிய இடங்களிலும் உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பதாகைகளை அமைத்தல், செய்திப் பத்திரிகைகள் மற்றும் ஆடியோ, வீடியோ சாதனங்களின் மூலமும் மற்றும் முகநூல், ட்விட்டர், யூடியுப் சேனல்கள் மற்றும் தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்கள் மூலமாகவும் இந்த பரப்புரைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உடல் உறுப்புகள் அவசியமாகத் தேவைப்படும் நோயாளிகளுக்கு இறந்தவர் சடலங்களில் இருந்து உடல் உறுப்புகளைப் பெறுவதற்கு வழிவகை செய்ய வலுவான நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒன்றிய அரசும் தொடர்பான அமைப்புகளும் மேற்கொள்ள உத்தேசித்துள்ள விவரங்களை தெரிவிக்க வேண்டும்.

******